[20th September 1961

கிறார்கள் என்று நினைக்கிறேன். மேலும் இப்போது எதையும் மாற்றுவதற்கில்லை. தேர்தல் கமிஷனுடைய முடிவை நாம் இப்போது மாற்றுவது முடியாது.

Sri V. K. KOTHANDARAMAN : வட ஆற்காடு ஜில்லாவில் பார்லிமெண்டுக்கு பிரித்திருக்கின்ற தொகுதியில் ஒரு லட்சம் அரிஜன மக்கள் இருக்கின்ற தொகுதியை பொது தொகுதியாகவும், குறைவாக இருக்கின்ற பகுதியை ரிசர்வ் தொகுதியாகவும் பிரித்திருக்கிறார்கள். இதை மாற்றி அமைப்பதற்கு தேர்தல் கமிஷனுக்குத் தெரிவித்து இதுவரை மாறுதல் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே இதை மாறுதல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : : நான் முன்பே சொன்னேன். தேர்தல் கமிஷன் செய்ததுதான் கடைசி முடிவாகவிருக்கிறது. இதில் சர்க்கார் எடுக்கக்கூடிய முயற்சி ஒன்றுமில்லை.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk* at the commencement of a speech indicates revision by the Member.**]

II. ADJOURNMENT MOTION *re* : FAILURE OF THE GOVERNMENT TO SECURE APPROVAL TO ESTABLISH AN ADDITIONAL UNIVERSITY,

DEPUTUY SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member, Sri M. Kalyanasundaram under rule 42 of the Madras Assembly Rules. It reads as follows :—

'I move that the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance, viz., the failure of the Government to secure the approval of the Government of India and the University Grants Commission for the proposal to establish an additional University in the State.'

I want to know how the matter is urgent and how the motion comes under rule 42 of the Assembly Rules.

Sri M. KALYANASUNDARAM : உதவி சபா நாயகர் அவர்களே, மூன்றாவது திட்ட காலத்தில் இன்னொரு பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் நிறுவப்படும் என்று அமைச்சர் அவர்கள் முன்னால் வாக்குறுதி தந்திருந்தார்கள். அதுவும் மதுரையில் நிறுவுவதற்கு ஆலோசிக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இவ்விதம் நிறுவுவது திருச்சியிலா அல்லது மதுரையிலா என்பது ஒருபுறம் இருக்கட்டும். எப்படியாவது இன்னொரு யூனிவர்சிடி நிறுவவேண்டிய அவசியமிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் நிலப்பரப்பின் அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும் சரி, எண்ணிக்கை அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும் சரி இப்போது இருக்கின்ற யூனிவர்சிடி போதாது. இப்போது அண்ணாமலை யுனிவர்சிடி **Residential** யூனிவர்சிடியாக இருக்கிறது. அதை விட்டுவிட்டால் நம்முடைய ராஜ்ஜியத்திற்கு ஒரே ஒரு யூனிவர்சிடி தான் இருக்கிறது. நம்முடைய மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் எண்ணிக்கையில் 13ஆக இருந்தாலும், பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. மற்ற ராஜ்யங்களை எடுத்துக் கொண்டு பார்த்தால், நம்முடைய மாவட்டங்கள் விஸ்தீரணத்தில் பெரிய மாவட்டங்களாக இருக்கின்றன. இவ்வளவு பெரும் பரப்புகொண்ட ஒரு ராஜ்யத்திற்கு ஒரே ஒரு யூனிவர்சிடி இருப்பது போதாது. இதனால் அதிகப்படியான அளவில் கல்லூரிகள் தோன்றுவதற்கும், வேறு பல வேலைகளுக்கும் சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே இன்னொரு யூனிவர்சிடி அமைக்க வேண்டும். அது இந்த மூன்றாவது திட்டத்தில் இல்லை என்று பார்லிமென்டில் தெரிவித்ததிலிருந்து நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. ஆகவே இதைப் பற்றியுள்ள விவரங்களை அறிய விரும்புகிறேன்.

20th September 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : : இதில் விவரங்களை தெரிந்து கொள்வதற்காக அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாண சுந்தரம் அவர்களுக்கு இந்தச் சபையிலே சுமார் 10 வருட அனுபவம் இருந்தும், அதிலும் ஒரு கட்சிக்குத் தலைவராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் இவ்விதமாக ஒரு அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுத்தது ஆச்சரியமாகவே இருக்கிறது. இருந்தாலும் இதிலுள்ள விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது மாதிரி இன்னொரு சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் சர்க்காரினுடைய நோக்கம். ஒன்று மட்டுமல்ல, இரண்டு ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால் இதைப்பற்றிக் கடைசியாக முடிவு எடுக்க வேண்டியது இந்த அரசாங்கம் மட்டுமல்ல, இப்போதுள்ள சர்வகலாசாலையோடு கலந்து ஆலோசித்து யூனிவர்சிடி கிரான்ட்ஸ் கமிஷன் முடிவு செய்து அதன் பின்னால் மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும். ஆனால் இம்மாதிரியான கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திலிருந்து வரக் கூடிய கருத்துக்களை அரசியல்வாதிகளின் கருத்துக்களாக சர்வகலாசாலை வட்டாரங்களில் நினைக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். எதைச் சொன்னாலும் "இது அரசியல்வாதிகளின் கூற்று" என்று ஆரம்பித்து விடுகிறார்கள். இதுதான் இன்றைக்கு இருக்கும் கஷ்டமாக இருக்கிறது. மூன்றாவதோ அல்லது இரண்டாவதோ, ஆக இன்னொரு சர்வகலாசாலையை மதுரையில் ஆரம்பிக்கவேண்டும் என்ற கருத்தை சர்வகலாசாலையின் செனட், சிண்டிகேட், வைஸ்-சான்ஸ்லர் ஆகியவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்க அவர்களுக்கு அனுப்பியபோது, அவர்கள் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களையும் அனுசரித்து, அவர்களிடம் சொல்லி, அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்து இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையால் இதில் இருக்கக்கூடிய கஷ்டங்களை அங்கத்தினர்கள் ஓரளவுக்கு உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன். எனினும் இந்த விஷயத்தை அட்ஜார்ன்மெண்ட் மோஷனைக் கொண்டுவருவது சரியல்ல என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திலிருந்து நான் அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுத்தது சரி என்று ஏற்படுகிறது. எனினும் இதைப்பற்றி விவாதிக்க வேண்டியது அவசியம். அட்ஜார்ன்மெண்ட் மோஷன் என்று இல்லாவிட்டாலும் ஒரு மணி நேரம் விவாதம் செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has got an opportunity to speak about this matter during the discussion on the Third Five-Year Plan which will take place in this House tomorrow and day-after. It is not an urgent matter to be taken up under rule 42 of the Legislative Assembly Rules. It does not refer to a matter in which the responsibility of Government is clearly involved. So I rule it out of order.

III. ANNOUNCEMENTS.

(1) NOMINATION TO THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

DEPUTY SPEAKER : I have to announce to the House that under rule 214 (1) of the Assembly Rules, I have nominated Sri R. Srinivasa Iyer to serve on the Committee on Government Assurances for the year 1961–62 in the vacancy caused by the death of Sri A. Vedarathnam.